JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 127/2014 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW1 | Prosecution /Defence / Court | |
| Name | Jayalakshmi | Caste | |
| Father's Name | W/o.Govindharaj | Calling | |
| Village | Thasampalayam, Vijayamalangalam | Religion | |
| Taluk | Perundurai | Age | |

(**Accused present**)
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 08.02.2024

**முதல் விசாரணை**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி நந்தகுமாரை எனக்கு தெரியும். கடந்த 2012 ம் வருடம் நான் ஆஜர் எதிரி நந்தகுமார் என்பவரிடம் கட்டிட வேலை செய்வதற்காக சென்றேன். ஆறுமாதகாலமாக சம்பளம் கொடுக்கவில்லை. அதற்கு பின்னர் சம்பளம் கொடுக்கவில்லை. நானும், செல்வகுமார், முல்லாபாய் ஆகியோர்கள் சென்று சம்பளத்தை கொடுங்கள் என்று கேட்டோம். அதற்கு ஆஜர் எதிரி சும்மா நை நை என்று கேட்டால் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்.

2)01.05.2013 ம் தேதியன்று காலை 9.30 மணி அளவில் நான் விஜயமங்களத்தில் இருந்து சிப்காட் ரவுண்டான அருகே வந்துகொண்டிருந்தபோது ஆஜர் எதிரி நந்தகுமார் அவரது காரில் வந்தார். நான் எக்ஸல் இருசக்கர வாகனத்தில் வந்தேன். அப்போது என்னை அவர்

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

வழிமறித்து வேலைக்கு கூப்பிட்டால் வரமாட்டேன் என்கிறாய் என்று கேட்டார். அதற்கு நான் சம்பளம் கொடுத்தால்தான் வருவேன் என்று கூறினேன்.

3)என் வீட்டு வேலைக்கு வா எனக்கு அடிமையானால் சம்பளம் கொடுக்குறேன் என்று கூறினார். அதன்பின்னர் நான் மேஸ்திரி செல்வகுமாருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். அதன்பின்னர் அவர்கள் வந்து எதற்காக ஒரு பெண்ணிடம் இவ்வாறு எல்லாம் பேசுகிறாய் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரி அவரது காரை எடுத்து சென்றுவிட்டார். அதன்பின்னர் நான் பயந்துகொண்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

4)அதன்பின்னர் நான் 05.05.2013ம் தேதியன்று ஆஜர் எதிரி நந்தகுமாரிடம் வந்து சம்பள பாக்கியை கேட்டதற்கு என்னை சும்மா வந்து தொந்தரவு செய்யாதீர்கள். அடுத்த நபர்களை வைத்து என்னை மிரட்டாதீர்கள் என்று கூறி சம்பளத்தை கொடுக்கவில்லை. என்னுடைய வீட்டிற்கு வேலைக்கு வந்தால் மட்டுமே நான் சம்பளம் தருவேன். இல்லை என்றால் நான் ஒரு பைசா கூட தரமாட்டேன் என்று கூறினார்.

5)அதன்பின்னர் நான் பெருந்துறை காவல் நிலையத்தில் வந்து எழுத்துமூலமான புகாரை 05.05.2013ம் தேதியன்று கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). நான் வேலை செய்யும் இடத்தை காண்பிக்குமாறு போலிசார் கேட்டு கொண்டதன்பேரில் நான் சம்பவம் இடம் சென்றபோது அங்கு செக்யூரிட்டி கருப்பணன் என்பவர் இருந்தார்.

6)பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் அந்த இடத்தை நான் அடையாளம் காட்ட அவர் பார்த்தார். என்னை உதவி

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

ஆய்வாளர் அவர்கள் விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 127/2014 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW2 | Prosecution /Defence / Court | |
| Name | Selvakumar | Caste | |
| Father's Name | Palanisamy | Calling | |
| Village | Andikadu, Vellode | Religion | |
| Taluk | Perundurai | Age | |

(**Accused present**)
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 08.02.2024

<u>**முதல் விசாரணை**</u>

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். அசா1 ஜெயலட்சுமி அவரும் கட்டிட வேலை செய்வதால் அவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி நந்தகுமாரை எனக்கு தெரியும். 01.05.2013 ம் தேதியன்று காலை 9.30 மணி அளவில் வேலைக்கு செல்வதற்காக சிப்காட்டினுள் 4th cross ல் நான் நின்றுகொண்டிருந்தேன். அப்போது அசா1 ஜெயலட்சுமி என்னை போனில் தொடர்பு கொண்டு அழுதுகொண்டே நான் வேலை செய்ததற்கு கூலி பணம் கேட்டபோது கொடுக்கவில்லை. கெட்டவார்த்தையால் திட்டுகிறார், வீட்டு வேலைக்கு வரச்சொல்கிறார் என்று சொன்னார்.

2)நான் அசா1 ஐ இன்று நீ வேலைக்கு வரவேண்டாம் வீட்டிற்கு போ என்று கூறிவிட்டு என்னுடைய வேலையை பார்ப்பதற்காக நான் சிப்காட்டிற்குள் சென்றுவிட்டேன். ஆஜர் எதிரி நந்தகுமார் எனக்கும் ஒரு

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

லட்சத்து இருபத்தைந்தாயிரம் பணம் எண்பது நாட்கள் கட்டிட வேலை செய்ததற்காக கொடுக்க வேண்டி உள்ளது. நானும் பலமுறை ஆஜர் எதிரியிடம் வேலை செய்த பணத்தை கேட்டபோது வேறு குரூப்பில் வேலைக்கு சேர்த்துவிட்டு எனக்கு தரவேண்டிய பணம் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டார். பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).